சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

முன்னிலை : - **திரு.R.விஜயன்,M.A.,B.L.,**

சார்பு நீதிபதி, அரூர்

2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 27 ம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண்.240/2023**

CNR.No.TNDP10-000518-2023

இராஜேந்திரன் ... வாதி

**// எதிராக //**

அரங்கண்ணல் ... பிரதிவாதி

இந்த வழக்கு 30.10.2023 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 03.07.2026 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.சிவக்குமார்,பி.எஸ்.சி.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சுந்தரராஜு,எம்.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலினை செய்தும், வாதுரையை கேட்டும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

1. தாவா தொகையான ரூ.2,70,933/-மும், பின் வட்டியும் கோர்ட் செலவும் வாதிக்கு பிரதிவாதியால் கிடைக்கும்படி தக்க தீர்ப்பாணை பிறப்பிக்கவேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதி தரப்பில் தாக்கல் செய்த வழக்குரையின் சுருக்கம்:-**

(i) பிரதிவாதி தன்னுடைய குடும்ப செலவிற்காகவும், அவசர நிமித்தமாகவும் வாதியிடம் ரொக்கமாக ரூ.2,00,000/-ம் (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) கடந்த 25.10.2020-ம் தேதியில் பெற்றுக்கொண்டு மேற்படி தொகை ரூ.2,00,000/-க்கு மாதம் 1-க்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி கொடுப்பதாக பிரதிவாதி ஒப்புக்கொண்டு வாதிக்கோ அல்லது வாதியின் உத்தரவு பெற்றவர்களுக்கோ கேட்டப்போது கொடுப்பதாக ஒப்பி வாதி பெயருக்கு



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.07.27 15:54:21 +0530

வாதியின் வீட்டில் வைத்து பிரதிவாதி தாவா புரோநோட் ஒன்றை எலவடை கிராமத்தில் எழுதிக் கொடுத்தார்.

(ii) தாவா புரோநோட்டின் அசல் வட்டி தொகைகளை திருப்பி செலுத்தும்படி வாதி பிரதிவாதியிடம் பலமுறை நேரில் கேட்டும் பிரதிவாதி இன்று நாளை என வீண் சாக்கு போக்குகள் சொல்லி காலம் கடத்தி வந்தார். அதனால் வாதி பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலம் கடந்த 25.09.2023-ம் தேதியிட்டு சட்ட அறிவிப்பு அனுப்பினார். மேற்படி சட்ட அறிவிப்பை 26.09.2023-ம் தேதியில் பிரதிவாதி பெற்றுக் கொண்டு. மேற்படி சட்ட அறிவிப்பிற்கு பின்னிட்டும் பிரதிவாதி வாதிக்கு யாதொரு தொகையும் செலுத்தவில்லை. வாதியின் சட்ட அறிவிப்பிற்கு பதில் சட்ட அறிவிப்பு ஏதும் பிரதிவாதி கொடுக்கவில்லை.

(iii) வாதி பிரதிவாதியிடம் தாவா புரோநோட்டில் 12% வட்டி கோரியிருபதால் பிரதிவாதி அரசு ஆசிரியர் என்பதால் 12% வட்டி கொடுக்க கடமைப்பட்டவர் ஆவார். பிரதிவாதிக்கு கடன் நிவாரண சட்டங்கள் எதுவும் பொருந்துவது இல்லை என்றும் என்று வாதி தனது தாவாவில் கூறியுள்ளார்.

3. <u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:-</u>

(i) வாதியின் தாவா பொய் மோசடியும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல தள்ளுண்டு போகத்தக்கதாகும் இந்த பதில் உரையில் பிரதிவாதி நேரடியாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர மற்ற சங்கதிகள் வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவராவார்.

(ii) தாவா பாரா 3 ல் கூறியுள்ள படி பிரதிவாதியிடம் வாதி குடும்ப செலவிற்காக வேண்டி கடந்த 25 10 2020 ஆம் தேதியில் 2,00,000/- ம் (இரண்டு லட்சம்) ரூ. 100 க்கு ரூ.1% வீதம் வட்டி பேசி பெற்றுக்கொண்டு மேற்படி தொகையை அசலும் வட்டியும் சேர்த்து வாதியிடமோ அல்லது அவரது முகவரிடமோ செலுத்துவதாக ஒப்பி வாதியின் பெயருக்கு எலவடை கிராமத்தில் புரோநோட்டு ஒன்று எழுதி கொடுத்தாக கூறும் சங்கதி



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.07.27 15:54:31 +0530

பொய்யானவையாகும்

(iii) தாவா பாரா 4 ல் கூறியுள்ள படி மேற்படி தொகையை பிரதிவாதி வாதியிடம் பலமுறை நேரில் கேட்கும் வாதி இன்று நாளை எனக்கூறி கால தாமதம் செய்து வந்ததாகவும் அதன் பின்பு பிரதிவாதிக்கு 25.09.2023 ஆம் தேதியிட்டு சட்ட அறிவிப்பு அனுப்பியதாகவும் சட்ட அறிவிப்பு பெற்றுக் கொண்டு பிரதிவாதி யாதொரு பதிலும் கொடுக்கவில்லை என்றும் இதனால் வரையில் பிரதிவாதி மேற்படி தொகையை செலுத்தவில்லை என்று கூறும் சங்கதிகள் பொய்யானவை வழக்கிற்காக கூறப்பட்டுள்ள பொய் சங்கதி ஆகும் பிரதிவாதி ஆசிரியர் என்பதால் ரூ 12 %வட்டி கொடுக்க கடமைப்பட்டவர் என்பது சட்டத்திற்கு புறம்பான செய்தியாகும்.

(iv) உண்மை சங்கதி யாதனின் வாதியிடும் 25 10 2020 ஆம் தேதியில் ஈட்டியம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சக்திவேல் என்பவர் தன் வியாபாரம் நிமித்தமாக 2 லட்சம் கடனாக பெற்றுள்ளார் மேற்படி தொகையில் ஒரு லட்சம் ரூபாய் திருப்பி செலுத்தி விட்டார் மீதி பாக்கி தொகையான ஒரு லட்சம் திருப்பி கொடுக்கும்படி மேற்படி சக்திவேலை வாதி கேட்டதற்கு மேற்படி சக்திவேல்வாதி பெயருக்கு புரோ நோட்டு எழுதி கொடுத்ததால் அதில் அரூரில் பிரதிவாதியை சாட்சி கையொப்பம் செய்து கொடுக்கும்படி வாதி கேட்டதால் பிரதிவாதியும் நம்பிக்கையின் அடிப்படையில் சாட்சி கையொயப்பம் செய்தார் என்பதுதான் உண்மை மேற்படி புரோ நோட்டில் வாதி சாட்சி கையொப்பம் செய்ததை வாதி தவறாக பயன்படுத்தி பிரதிவாதி அரசு ஊழியர் என்பதால் அக்கிர லாபம் அடையும் நோக்கத்தோடு வாதி இந்த தாவாவை பிரதிவாதி மீது தொடர்ந்துள்ளார் என்பதுதான் உண்மையாகும் பிரதிவாதி எப்போதும் வாதியிடம் கடன் பெற்றதில்லை அதற்காக ’வேண்டி பிரதிவாதி புரோநோட் எழுதியும் கொடுக்கவில்லை, வாதிக்கு பிரதிவாதி கடன் தொகை எதுவும் கொடுக்க வேண்டியது இல்லை வாதி எப்போதும் பிரதிவாதியிடம்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.07.27 15:54:34 +0530

கடனை திருப்பிக் கொடுக்கும்படி நேரில் கேட்டதில்லை என்பதுதான் உண்மை ஆகும்

(v) வாதி தாவில் குறிப்பிட்டுள்ள தொகைக்கு செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது வாதி உண்மை காரணங்களுடன் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை இதனாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது ஆகும். ஆகவே கனம் கோட்டார் அவர் தயவு கூர்ந்து மேற்படி தாவாவை பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று பிரதிவாதி தனது பதிலுரையில் கூறியுள்ளார்.

4. **வாதி தாக்கல் செய்த வழக்குரை, பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை ஆகியவற்றை ஆராய்ந்து கடந்த 10.06.2025ம் தேதி கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.**

**1. தாவா கடனுறுதிச்சீட்டு உண்மையானதா? அது தாவாவில் கூறியுள்ளபடி பிரதிவாதி பெற்ற கடனுக்காக எழுதிகொடுக்கப்பட்ட ஆவணமா ?**

**2. தாவா கடனுறுதிச் சீட்டின் அடிப்படையில், வாதிக்கு தாவா தொகை கிடைக்கத்தக்கதா ?**

**3. வாதிக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் என்ன ?**

5. **சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பற்றிய விபரங்கள் :-**

வாதி தரப்பில் வாதியே வா.சா.1 ஆகவும், ஒரு ராஜேஷ் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**எழுவினா-1 மற்றும் எழுவினா-2: -**

**6.** எழுவினா-1 மற்றும் எழுவினா-2 ஆகியன உள்ளவை ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருப்பதால் அவை இரண்டும் ஒரு சேர எடுத்துக்கொள்ளப்படுகிறது.



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.07.27 15:54:36 +0530

**1. தாவா கடனுறுதிச்சீட்டு உண்மையானதா? அது தாவாவில் கூறியுள்ளபடி பிரதிவாதி பெற்ற கடனுக்காக எழுதிகொடுக்கப்பட்ட ஆவணமா ?**

**2. தாவா கடனுறுதிச் சீட்டின் அடிப்படையில், வாதிக்கு தாவா தொகை கிடைக்கத்தக்கதா ?**

**7.** வாதி தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலினை செய்யப்பட்டது. வாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், பிரதிவாதி தன்னுடைய குடும்ப செலவிற்காகவும், அவசர நிமித்தமாகவும் தன்னிடம் ரொக்கமாக ரூ.2,00,000/-ம் (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) கடந்த 25.10.2020-ம் தேதியில் பெற்றுக்கொண்டு மேற்படி தொகை ரூ.2,00,000/-க்கு மாதம் 1-க்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி கொடுப்பதாக பிரதிவாதி ஒப்புக்கொண்டு தனக்கோ அல்லது தனது உத்தரவு பெற்றவர்களுக்கோ கேட்டபோது கொடுப்பதாக ஒப்பி தன் பெயருக்கு பிரதிவாதி தாவா புரோநோட் ஒன்றை எலவடை கிராமத்தில் எழுதிக் கொடுத்தார் என்றும், தாவா புரோநோட்டின் அசல் வட்டி தொகைகளை திருப்பி செலுத்தும்படி தான் பிரதிவாதியிடம் பலமுறை நேரில் கேட்டும் பிரதிவாதி இன்று நாளை என வீண் சாக்கு போக்குகள் சொல்லி காலம் கடத்தி வந்தார் என்றும், கடந்த 25.09.2023-ம் தேதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு ஒன்றை அனுப்பினேன் என்றும், மேற்படி சட்ட அறிவிப்பை 26.09.2023-ம் தேதியில் பிரதிவாதி பெற்றுக் கொண்டு மேற்படி சட்ட அறிவிப்பிற்கு பின்னிட்டும் பிரதிவாதி தனக்கு செலுத்த வேண்டிய யாதொரு தொகையும் செலுத்தவில்லை என்றும், தனது சட்ட அறிவிப்பிற்கு பதில் சட்ட அறிவிப்பு ஏதும் பிரதிவாதி கொடுக்கவில்லை என்றும் வாதி தரப்பு வழக்கறிஞர் வாதிட்டுள்ளார்.

**8.** பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், வாதியிடம் தான் எப்போதும் ரூ.2,00,000/-ம் கடனாக பெற்றதில்லை என்றும், மேற்படி தொகைக்கு 25.10.2020 ம்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.07.27 15:54:38 +0530

தேதியில் மாதம் ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு வாதியின் பெயருக்கு எலவடை கிராமத்தில் புரோநோட் எப்போதும் எழுதிக்கொடுத்ததில்லை என்றும், வாதி எப்போதும் தன்னிடம் அசல் வட்டி தொகைகளை திருப்பி செலுத்தும்படி கேட்டதில்லை என்றும், தானும் இன்று நாளை என பதில் கூறியதும் இல்லை என்றும், தனது நண்பர் ஈட்டியம்பட்டி கிராமத்தை சார்ந்த சக்திவேல் என்பவர் ராஜேஷ் என்பவரின் மூலம் ரூ.2,00,000/-ம் கடனாக பெற்று அதில் ரூ.1,00,000/-ஐ திருப்பி கொடுத்துவிட்டார் என்றும், மீதி தொகை ரூ.1,00,000/-க்கு மேற்படி சக்திவேல் என்பவரிடம் புரோநோட் எழுதிவாங்கினார் என்றும், அதில் அரூரில் தன்னிடம் சாட்சி கையொப்பம் போடும்படி கேட்டு வாங்கினார் என்றும், தன்னிடம் பெற்ற கையொப்பத்தை கொண்டு தான் அரசு ஆசிரியர் என்பதால் சுலபமாக பணத்தை வசூலித்துக்கொள்ளலாம் என்ற அடிப்படையில் பொய்யான புரோநோட்டை தயார் செய்து தன் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், தான் எப்போதும் வாதியிடம் ரூ.2,00,000/-ம் கடனாக பெற்றதும் இல்லை அதற்கு தான் வாதிக்கு எலவடை கிராமத்திற்கு சென்று புரோநோட் எழுதிக்கொடுத்ததும் இல்லை என்றும், வாதி சட்டத்திற்கு புறம்பாக பொய்யான புரோநோட்டை தயார் செய்து அக்கிரம லாபம் அடையும் எண்ணத்தில் தன் மீது பொய்யான தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்பது தான் உண்மை என்றும், வாதி யார் என்ற விவரமும் தனக்கு தெரியாது என்றும், வாதி தூயகரங்களுடன் நீதிமன்றத்தில் தன் மீது வழக்கு தாக்கல் செய்யவில்லை என்பதுதான் உண்மை என்றும், மேற்படி வாதி தன் மீது தனக்கு எதிராக கூறப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளையும் வன்மையாக மறுக்கிறேன் என்றும் வாதிட்டுள்ளார்.

**9.** வாதி தரப்பிற்கு ஆதரவாக 25.10.2020 ம் தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த தாவா புரோநோட் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 25.09.2023 ம் தேதியிட்ட



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.07.27 15:54:40 +0530

வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 26.09.2023 ம் தேதியிட்ட சட்ட அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**10.** இருதரப்பு வாதங்கள் வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. வாதியானவர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் குறிப்பாக பிரதிவாதி அவருடைய குடும்ப செலவிற்காகவும், அவரச நிமித்தாகவும் தன்னிடம் ரொக்கமாக ரூ.2,00,000/-க்கு வட்டி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு தாவா கடனுறுதிச் சீட்டை எழுதிக்கொடுத்தார் என்றும், அதன்படி கடன் மற்றும் வட்டித்தொகையை திரும்பி செலுத்த தான் பிரதிவாதியிடம் பலமுறை நேரில் கேட்டும் பிரதிவாதி இன்று நாளை என வீண் சாக்கு போக்குகள் சொல்லி காலம் கடத்தி வந்ததால், 25.09.2023 ம் தேதியில் ஒரு அறிவிப்பு அனுப்பி அந்த அறிவிப்பை 26.09.2023 ம் தேதியில் பிரதிவாதி பெற்றுக்கொண்டு பணமோ, பதிலோ கொடுக்கவில்லை என்று சாட்சியமளித்துள்ளார். தாவா கடனுறுதிச் சீட்டை எழுதி சாட்சி கையொப்பம் செய்த ராஜேஷ் என்பவர் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவர் குறிப்பாக தனது சாட்சியத்தில் பிரதிவாதி தன்னுடைய குடும்ப செலவிற்காகவும், அவசர மருத்துவ செலவிற்காகவும் வேண்டி வாதியிடம் ரொக்கம் ரூ.2,00,000/-த்தை கடந்த 25.10.2020 ம் தேதி பெற்றுக்கொண்டு வாதி பெயருக்கு வாதியின் வீட்டில் வைத்த தாவா புரோநோட் ஒன்றை எழுதிக்கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார். வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சியத்தின்படி பிரதிவாதியானவர் 25.10.2020 ம் தேதியில் தாவா கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுத்து ரூ.2,00,000/-ம் கடன் பெற்றுள்ளார் என்பதும், அதனை பிரதிவாதி திருப்பி கொடுக்கவில்லை என்பதும் நிரூபணம் ஆகிறது.



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.07.27 15:54:43 +0530

**11.** பிரதிவாதி தரப்பில் குறிப்பாக 25.10.2020 ம் தேடிதிடியல் ஈட்டியம்பட்டி கிராமத்தை சேர்ந்த சக்திவேல் என்பவர் தனது வியாபார நிமிர்த்தமாக ரூ.2,00,000/-ம் கடனாக பெற்றுள்ளார் என்றும், அந்த தொகையில் ரூ.1,00,000/-ம் திருப்பி செலுத்திவிட்டார் என்றும், மீதி பாக்கி தொகையான ரூ.1,00,000/-த்தை திருப்பி கொடுக்கும்படி சக்திவேலை வாதி கேட்டதற்கு மேற்படி சக்திவேல் வாதி பெயருக்கு புரோநோட்டை எழுதிக்கொடுத்ததாகவும், அதில் பிரதிவாதி சாட்சி கையொப்பம் செய்து கொடுக்கும்படி வாதி கேட்டதால் பிரதிவாதியும் நம்பிக்கையின் அடிப்படையில் சாட்சி கையொப்பம் செய்தார் என்பது தான் உண்மை என்றும், புரோநோட்டில் வாதி சாட்சி கையொப்பம் செய்ததை தவறாக பயன்படுத்தி பிரதிவதி அரசு ஊழியர் என்பதால் அக்கிரம லாபம் அடைய வேண்டி வாதி பிரதிவாதி மீது இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதாகவும், பிரதிவாதி எப்போதும் வாதியிடம் கடன் பெறவில்லை என்று வாதிடப்பட்டது. வா.சா.ஆ.1 தாவா கடனுறுதிச்சீட்டை பரிசிலனை செய்து பார்க்கும்போது அதில் பிரதிவாதி தரப்பில் கூறுவதுபோல சாட்சி கையொப்பம் செய்யவில்லை. கடன் பெற்றதற்காக ரெவென்யூ ஸ்டாம்ப் மீது கையொப்பம் செய்து கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது. பிரதிவாதி ஆசிரியர், அவர் படித்தவர். தான் சாட்சி கையொப்பம் ம்ட்டும் தான் கடனுறுதிச்சீட்டில் செய்து கொடுத்தேன் என்று கூறுவது ஏற்புடையதாக இல்லை. மேலும் வா.சா.2 சாட்சியத்தை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது பின்வருமாறு கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது. அவை வா.சா.2 குறுக்கு விசாரணை சாட்சி பக்கம் 2 ல் பத்தி 4 ல், **"நாங்கள் நடத்தி வந்த நிதிநிறுவனத்தை கலைத்து விட்டோம் என்றால் சரிதான். நான் நிதிநிறுவனம் நடத்திவந்த காலகட்டத்தில் சக்திவேல் என்னிடம் ரூபாய் 2 இலட்சம் கடன் வாங்கினார் அப்போது இந்த வழக்கின் பிரதிவாதியான அரங்கண்ணல் என்பவரும் உடன் வந்தார் என்றால் அப்படி எதுவும் நடக்கவில்லை.**



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.07.27 15:54:45 +0530

**சக்திவேல் என்பவர் திரு.வி.க நகரில் காய்கறி கடை நடத்தி வந்தார் என்றால் இல்லை. சக்திவேல் எனக்கு நன்கு தெரிந்தவர் என்பதால்தான் நிதிநிறுவனம் மூலம் அவருக்கு கடன் கொடுத்தேன் என்றால் இல்லை. நிதிநிறுவனம் நடத்தி அதனை கலைக்கும்போது அந்த நிதிநிறுவனத்துக்கு யாராவது பணம் செலுத்தாமல் இருந்தால் அவர்களிடம் பெற்று வைத்திருந்த பூர்த்திசெய்யப்படாத பத்திரத்தை பிரித்துக்கொள்வோம் என்றால் சரிதான். அவ்வாறு பிரித்து வந்த பத்திரத்தை தான் என்மூலமாக வழக்கு தாக்கல் செய்யாமல் எனது நண்பர் ராஜேந்திரனை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை"** என்று கேள்விகள் கேட்டு பதில்கள் பெறப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையில் வாதியிடம் ஒரு சக்திவேல் கடன் வாங்கியதாகவும், அதற்கு பிரதிவாதி சாட்சி கையொப்பம் செய்ததாகவும், அந்த சாட்சி கையொப்பம் செய்த ஆவணத்தை தான் பிரதிவாதியிடம் கடன் பெற்றதாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்திருப்பதாக எதிர்வாதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் வா.சா.2 யிடம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது வா.சா.2 நடத்திவரும் நிதி நிறுவனத்தில் ஒரு சக்திவேல் என்பவர் ரூ.2,00,000/-ம் கடன் வாங்கியதாகவும், அந்தநிதி நிறுவனத்தில் கையொப்பம் மட்டும் செய்து பூர்த்தி செய்யாமல் வைத்திருந்த கடனுறுதிச் சீட்டுக்களை பெற்று அவரது நண்பரான வாதியை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கேள்விகள் கேட்டு பதில் பெறப்பட்டுள்ளது. மேற்படி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டிருப்பது பிரதிவாதி ஏற்கனவே பதில் வழக்குரை தாக்கல் செய்ததற்கு முரண்பாடாக உள்ளது.

**12.** பிரதிவாதி தாவா கடனுறுதிச்சீட்டில் உள்ள கையெழுத்தை மறுக்காத நிலையில் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 118 ன்படி அந்த ஆவணம் உரிய மறுபயனுக்காக தான் எழுதப்பட்டது என்று இந்நீதிமன்றம் அனுமானம் கொள்கிறது. அந்த



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.07.27 15:54:48 +0530

அனுமானத்திற்கு முரணாக பிரதிவாதி தரப்பில் எந்தவொரு சங்கதியும் நிரூபணம் செய்யப்படவில்லை. மேலும் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் சாட்சியத்தில், தான் சாட்சி கையொப்பம் போட்ட ஆவணத்தை பொய்யாக தயார் செய்து வழக்கு தாக்கல் செய்திருப்பதாக கூறியுள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், அவரிடம் காட்டப்பட்ட அவர் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் அவருடைய கையெழுத்தையே தன்னுடைய கையெழுத்து இல்லை என்று மறுத்துள்ளார். மேலும் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள அவருடைய கையெழுத்தையே தன்னுடையது இல்லை என்று மறுத்துள்ளார். இவ்வறு இருக்கும்போது பிரதிவாதி பொய்யான சங்கதிகளுடன் பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் பிரதிவாதி தனது குறுக்கு விசாரணை சாட்சி பக்கம் 1ல் குறிப்பாக, **"நான் நன்கு படித்தவர், அரசு ஆசிரியராக உள்ளேன், புரோநோட்டில் கடன் பெற்றதாக கையெழுத்து போடுவதும் அதில் சாட்சி கையெழுத்து போடுவதற்கும் உள்ள வித்தியாசம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான்"** என்று சாட்சியமளித்துள்ளார். ஆகவே பிரதிவாதி ஆசிரியர், எம்.ஏ.,பி.எட்., எம்.பில்., படித்தவர். அவ்வாறு இருக்கும்போது ஒரு சக்திவேல் என்பதற்கு கடன் பெறுவதற்காக சாட்சி கையொப்பம் போட்டேன். அதனை மோசடியாக கடனுறுதிச் சீட்டாக மாற்றி தான் கடன் பெற்றதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று எதிர்வாதம் செய்வது சட்டப்படி ஏற்புடையதாக இல்லை. ஆகவே மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் பிரதிவாதியானவர் வாதியிடம் தாவா கடனுறுதிச் சீட்டு எழுதிக்கொடுத்தது உண்மையானது என்றும், அதில் கண்டுள்ள தொகையை பெற்றுக்கொண்டு தான் பிரதிவாதி கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், வாதிக்கு தாவா கடனுறுதிச்சீட்டின் அடிப்படையில் தாவா தொகை வாதிக்கு



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.07.27 15:54:50 +0530

கிடைக்கத்தக்கது என்றும் முடிவு செய்து எழுவினா-1 மற்றும் எழுவினா-2 வாதிக்கு ஆதரவாக தீர்வு காண்கிறது.

**எழுவினா- 3: -**

**3.வாதிக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் என்ன ?**

**13.** முந்தைய எழுவினா-1 மற்றும் எழுவினா-2 வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்பட்டுள்ளதால், வாதிக்கு தாவா தொகை வட்டியுடன் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இவ்வெழுவினாவிற்கு விடைக்காண்கிறது.

**இறுதியாக,** இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதி வாதிக்கு வழக்குத் தொகை **ரூ.2,70,933/-** (ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபதாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து மூன்று மட்டும்) ஐயும், வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரையில் அசல் தொகை **ரூ.2,00,000/-**க்கு ஆண்டு ஒன்றுக்கு 06% சதவீதம் வட்டியுடனும், தீர்ப்பாணைக்கு பின்னிட்டு தொகை வசூலாகும் தேதி வரை அசல் தொகை **ரூ.2,00,000/-**க்கு ஆண்டு ஒன்றுக்கு 06% சதவீதம் வட்டியுடனும் சேர்த்து செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகின்றது. வாதிக்கு பிரதிவாதி செலவுத்தொகையை செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 27 ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.07.27 15:54:53 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.

**வாதி தரப்பு சாட்சிகள்** : -

| | |
|---|---|
| வா.சா.1 | இராஜேந்திரன் (வாதி) |
| வா.சா.2 | ராஜேஷ் |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்** : -

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 25.10.2020 | வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த தாவா புரோநோட் - அசல் |
| வா.சா.ஆ.2 | 25.09.2023 | வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு - அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 26.09.2023 | சட்ட அறிவிப்பை பிரதவிாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை - அசல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சி** : -

| | |
|---|---|
| பி.வா.சா.1 | அரங்கண்ணல் (பிரதிவாதி) |

**பிரதிவாதி தரப்பு சாண்றாவணம்** : -

---இல்லை---

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.07.27 15:54:56 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.